சுருக்கம்

பணியமைப்பு – நெடுஞ்சாலைத் துறை – தமிழ்நாடு நெடுஞ்சாலை பொறியியல் பணிகள் – கண்காணிப்புப் பொறியாளர் பதவியிலிருந்து தலைமைப் பொறியாளர் பதவிக்கு 2017–2018 ஆம் ஆண்டிற்கான தற்காலிக தேர்ந்தோர் பெயர் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது – பணியிடமாற்றம் மற்றும் பதவி உயர்வு ஆணை – வெளியிடப்படுகிறது

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே.1) துறை

அரசாணை (ப) எண். 202 நாள்: 18.08.2017

ஹேவிளம்பி, ஆவணி 2 , திருவள்ளுவராண்டு 2048

படிக்கவும்:-

1. அரசாணை (டி) எண்.135, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே.1) துறை நாள் 09.06.2017
2. அரசாணை (நிலை) எண். 62, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே.1) துறை, நாள் 18.08.2017.

---------

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு எண்.47 (1)ன் படி கீழ்க்காணும் 4 கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு தற்காலிகமாக தலைமைப் பொறியாளர் பதவி உயர்வு அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1 | பி.ஆர்.குமார் |
| 2 | எம்.கே.செல்வன் |
| 3 | எஸ்.சுமதி |
| 4 | என்.சாந்தி |

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்க்கண்ட 7 கண்காணிப்புப் பொறியாளர்கள் பெயர்கள் அடங்கிய 2017–2018 ஆம் ஆண்டிற்கான தலைமைப் பொறியாளர் பதவி உயர்விற்கு தகுதிப் பெற்றுள்ளவர்களின் தற்காலிக தேர்ந்தோர் பெயர் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| 1 | பி.ஆர்.குமார் |
| 2 | எம்.கே.செல்வன் |
| 3 | எஸ்.சுமதி |
| 4 | என்.சாந்தி |
| 5 | என்.பாலமுருகன் |
| 6 | இரா.கீதா |
| 7 | எம்.விஜயா |

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தற்காலிக தலைமைப் பொறியாளர்களாக பதவியுயர்வு பெற்ற வரிசை எண். 1–4 வரையுள்ள அலுவலர்களில் வரிசை எண் 4–ல் உள்ள திருமதி என். சாந்தி அவர்களுக்கு கீழ்க்கண்டவாறு பணியிடமாற்றமும், வரிசை எண். 5 மற்றும் 6–ல் உள்ள கீழ்க்கண்ட கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு மற்றும் பணியிடம் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| தேர்ந்தோர் பெயர் பட்டியலில் வ. எண் | பெயர் | பணியமர்வு செய்யும் பணியிடம் |
|---|---|---|
| 4 | திருமதி என்.சாந்தி, தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) | தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) (காலிப்பணியிடம்) |
| 5 | திரு என்.பாலமுருகன், கண்காணிப்புப் பொறியாளர் | தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) |
| 6 | திருமதி இரா.கீதா, இணை இயக்குநர் | இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் (காலிப்பணியிடம்) |

4. அரசு கடித எண்.8119/அ.வி.II/1/1980, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்.30.4.1980–ன்படி தலைமைப் பொறியாளர்களாக பதவி உயர்வு பெறும் கண்காணிப்புப் பொறியாளர்களின் ஊதியத்தினை அவர்கள் பதவி உயர்வில் தலைமைப் பொறியாளர்களாக பணியில் சேரும் நாள் முதல் நிர்ணயிக்கப்பட ஏதுவாக அவர்கள் தலைமைப் பொறியாளர் பதவியை வகிக்க தேவையான அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்துள்ளார்கள் எனச் சான்றளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்
(முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை–25 மூலமாக)
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை–25.
அனைத்து தலைமைப் பொறியாளர்கள், சென்னை–25.
மாநில கணக்காயர், சென்னை – 9/18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–8/35.

நகல்:–
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.
அனைத்து அலுவலர்கள் மற்றும் பிரிவுகள், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.
கோ.எண்.7038/எச்.கே.1/2017
உதிரி நகல்/இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்